**செய்தி வெளியீடு எண்: 470** **நாள்: 07.07.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த திரு.ஜெயராஜ் மற்றும் திரு. பென்னிக்ஸ் ஆகியோர் மரணம் குறித்து மத்திய புலனாய்வு துறை (CBI) மூலம் விசாரிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அவர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதினார். தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த திரு.ஜெயராஜ் மற்றும் திரு.பென்னிக்ஸ் மரணம் குறித்து மத்திய புலனாய்வு துறை (CBI) விசாரிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு தற்போது அறிவிக்கையை (Notification) வெளியிட்டுள்ளது.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**